# 27-05-2024 செய்தி

## கான்ஸ் விழாவில் 3 விருதுகள் இந்தியர்கள் அசத்தல் சாதனை

- ஐரோப்பிய நாடான பிரான்சின் கான்ஸ் நகரில், ஆண்டுதோறும் திரைப்பட விழா, நடக்கிறது. இதன், 77வது விழா, நிறைவடைந்தது.

**மூன்று பிரிவுகள்**

- இந்தியாவைச் சேர்ந்த, எட்டு இந்தியர்கள் அல்லது இந்தியா தொடர்புடைய படங்கள் இதில் பங்கேற்றன. அதில், மூன்று பிரிவுகளில் இந்தியர்கள் விருது பெற்றனர்.

1. பாயல் கபாடியாவின், ஆல் வி இமாஜின் அஸ் லைட்ஸ் என்ற படம், இரண்டாவது உயரிய விருதான, கிராண்ட் பிரிக்ஸ் விருதை வென்றது.

- மேலும், கான்ஸ் திரைப்பட விழாவில், விருது பெற்ற முதல் பெண் இயக்குனர் என்ற பெருமையை அவர்பெற்றார்.
- கான்ஸ் திரைப்பட விழாவில், 1994ல், ஷாஜி கருணின், ஸ்வாஹம் என்ற திரைப்படம் விருது வென்றது.
- அதற்கு, 30 ஆண்டுக்குப் பின் தற்போது தான் இந்திய படத்துக்கு விருது கிடைத்துள்ளது.

2. சிதானந்தா நாயக் இயக்கியுள்ள சன் பிளவர் வேர் த பர்ஸ்ட் ஒன் டு நோ என்ற படம், விருது பெற்றுள்ளது.
3. அனுசுயா சென்குப்தாவின், த ஷேம் லெஸ் படமும் விருதுகள் பெற்றுள்ளது.

## உலக அறிவுசார் சொத்து அமைப்பு ஒப்பந்தம்

- மரபியல் வளங்கள் மற்றும் பாரம்பரிய அறிவாற்றலைப் பாதுகாக்க உலக அறிவுசார் சொத்து அமைப்பு (டபிள்யூஐபிஓ) புதிய ஒப்பந்தத்தை இறுதி செய்துள்ளது.
- மருத்துவ தாவரங்கள், வேளாண் பயிர்கள், விலங்கினங்கள் போன்ற மரபியல் வளங்களை அறிவுசார் சொத்துகளாகப் பாதுகாக்க முடியாது.
- ஆனால், அந்த வளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கண்டுபிடிப்புகளைத் காப்புரிமைகள் மூலம் அறிவுசார் சொத்துகளாகப் பாதுகாக்க முடியும்.
- ஸ்விட்சர்லாந்து தலைநகர் ஜெனீவாவில் உள்ள உலக அறிவுசார் சொத்து அமைப்பின் தலைமையகத்தில் 192 நாடுகள் பங்கேற்ற மாநாடு நடைபெற்றது.

**பாரம்பரிய அறிவாற்றலுடன் தொடர்பு:**

- சில மரபியல் வளங்களை பூர்வகுடி மக்களும் உள்ளூர்வாசிகளும் பல தலைமுறைகளாகப் பயன்படுத்தியும் பாதுகாத்தும் வருவதன் மூலம், அந்த வளங்கள் பாரம்பரிய அறிவாற்றலுடன் தொடர்புகொண்டுள்ளது.
- இந்த அறிவாற்றல் சில நேரங்களில் அறிவியல் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் அந்த அறிவாற்றல் பாதுகாக்கப்பட்ட கண்டுபிடிப்புகளின் வளர்ச்சிக்கும் பங்களிக்கும்.

**இந்தியாவுக்கு முக்கியப் பங்கு:**

- அபரிமிதமான பாரம்பரிய அறிவாற்றல் மற்றும் ஞானத்துடன் பல்லுயிர் மையங்களின் முனையமாக இந்தியா விளங்குகிறது.
- இந்நிலையில் மாநாட்டில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதில் இந்தியா முக்கியப் பங்காற்றியது.

## வரலாறு படைத்தார் தீபா கர்மாகர் ஆசிய ஜிம்னாஸ்டிக்ஸில் தங்கம்

- ஆசிய சீனியர் ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் எனற சாதனையை படைத்துள்ளார் நட்சத்திர வீராங்கனை தீபா கர்மாகர்.

SURESH'